# ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: ஓர் திறனாய்வு

திரு. மனோகரன் மதிபன்

2008/2009

FAC382
Project Report
Library - EUSL

சமூக விஞ்ஞானக் கற்கைகள் துறை,

(அரசறிவியல்)

கலைகலாசார பீடம்,

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை,

2014.

PROCESSED
Main Library, EUSL

# பொருளடக்கம்

ஆய்வுச்சுருக்கம் .......... iv

## முதலாம் அத்தியாயம்

அறிமுகம்

1. அறிமுகம் .......... 1
2. இலக்கிய மீளாய்வு .......... 2
   i. புத்தகங்கள் .......... 2
   ii. சஞ்சிகைகள் .......... 6
   iii. பத்திரிகைகள் .......... 7
   iv. இணையதளங்கள் .......... 8
3. கோட்பாடு விளக்கம் .......... 10
4. ஆய்வுப் பிரச்சினைகள் .......... 11
5. ஆய்வு வினாக்கள் .......... 12
6. ஆய்வு நோக்கங்கள் .......... 12
7. ஆய்வுக் கருதுகோள் .......... 13
8. ஆய்வு முறையியல் .......... 13
9. அத்தியாய விளக்கம் .......... 14

## இரண்டாம் அத்தியாயம்

இறுதி யுத்தமும் மனிதாபிமான, மனித உரிமை சட்ட மீறல்களும்

1. அறிமுகம் .......... 15
2. இறுதி யுத்தத்திற்கான காரணங்கள் .......... 17
3. இறுதி யுத்தம் .......... 18
4. சர்வதேச மனித உரிமைச் சட்டமும் மனிதாபிமானச் சட்டமும் .......... 20
5. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற மனித உரிமை, மனிதாபிமான சட்ட மீறல்கள் .......... 22
   i. சர்வதேச பொது மன்னிப்பு சபை .......... 23
   ii. சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் .......... 25

iii. நெருக்கடி குழு ..........26
iv. நிபுணர் குழு அறிக்கை ..........27
v. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழு அறிக்கை 30
vi. சனல்-4 தொலைக்காட்சி ..........32
6. நிரந்தர மக்கள் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கள் ..........33
7. முடிவுரை ..........34

## மூன்றாம் அத்தியாயம்

மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களும் அதன் சர்வதேச முக்கியத்துவமும்

1. அறிமுகம் ..........37
2. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை ..........38
3. 2009-ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் ..........40
4. 2012-ம் ஆண்டு தீர்மானத்துக்கான பின்னணி ..........41
5. 2012-ம் ஆண்டு தீர்மானம் ..........43
I. தீர்மான உள்ளடக்கம் ..........44
II. நாடுகளின் தாக்கங்கள் ..........45
6. 2013-ம் ஆண்டு தீர்மானத்திற்கான பின்னணி ..........47
7. 2013-ம் ஆண்டு தீர்மானம் ..........49
I. வரைபுத் தீர்மானம் ..........50
II. தீர்மானத்தில் இடம்பெற்ற திருத்தங்கள் ..........51
III. நாடுகளின் தாக்கங்கள் ..........53
8. தீர்மானத்தின் பிரதிபலிப்பு ..........55
9. முடிவுரை ..........57

## நான்காம் அத்தியாயம்

சர்வதேச விசாரணையும் அதன் முக்கியத்துவமும்

1. அறிமுகம் ..........59
2. சர்வதேச விசாரணையினை கோரும் தீர்மானத்திற்கான பின்னணி ..........60

i. நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் ....61
ii. பொதுநலவாய மாநாடு ....62
3. 2014-ம் ஆண்டு தீர்மானம். ....63
i. தீர்மானத்தின் உள்ளடக்கம் ....64
ii. நாடுகளின் தாக்கங்கள் ....65
4. சர்வதேச விசாரணை ....67
i. சர்வதேச விசாரணைக்குழுவின் நியமனம் ....69
ii. விசாரணைக்குழுவின் கடமைகளும் பொறுப்புக்களும் ....71
iii. விசாரணைக்குழுவின் செயற்பாடுகள் ....72
5. சர்வதேச விசாரணையும் இலங்கையும் ....73
6. முடிவுரை ....75

## ஐந்தாம் அத்தியாயம்

முடிவுரை
1. அறிமுகம் ....78
2. கருதுகோள் பரிசோதனை ....82
3. கோட்பாடு ....84
4. பரிந்துரைகள் ....85
i. தேசிய ரீதியிலானவை ....85
ii. சர்வதேச ரீதியிலானவை ....86

**நூல்ப்பட்டியல்**

ஆங்கில நூல்கள் ....87
தமிழ் நூல்கள் ....87
சஞ்சிகைகள் ....89
பத்திரிகைகள் ....90
இணையதளங்கள் ....91

# ஆய்வுச்சுருக்கம்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது இலங்கையின் இறுதி யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னர் சர்வதேச ரீதியில் ஐக்கிய நாடுகள் சபை சார்ந்த சர்வதேச சமூகத்தின் நடவடிக்கைகளை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது. இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் பாரிய யுத்தமொன்று 2006-ம் ஆண்டு தொடக்கம் 2009-ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் நடைபெற்றதோடு, இவ் யுத்தத்தில் சர்வதேச மனித உரிமைச் சட்டமும் சர்வதேச மனிதாபிமானச் சட்டமும் பாரிய அளவில் மீறப்பட்டு பல ஆயிரக்கணக்கான உயிர் இழப்புக்கள் ஏற்படவும் காரணமானது. ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு அறிக்கையின் படி இறுதி யுத்தத்தில் 40 ஆயிரம் பொதுமக்கள் இறந்ததாக மதிப்பிட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு உட்பட பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சியும் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சர்வதேச சட்ட மீறல்களை ஆவணப்படமாக தொகுத்து வெளியிட்டது.

இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சர்வதேச சட்ட மீறல்களை ஐக்கிய நாடுகள் சபை தடுத்து நிறுத்த தவறியமை சர்வதேச ரீதியில் அழுத்தங்களை உருவாக்கியிருந்தது. இந்த சந்தர்ப்பத்தை சாதகமாக பயன்படுத்திய ஐக்கிய அமெரிக்கா தனது ஆசியாவை மையப்படுத்திய கொள்கையின் பிரகாரம் இலங்கை சீன உறவை கட்டுப்படுத்தவும் இலங்கையை தனது நலன் சார்ந்து செயற்பட வைக்கவும் மனித உரிமைகள் பேரவையினை பயன்படுத்திக்கொள்ள முன்வந்தது. இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற யுத்த குற்றங்களை மையப்படுத்தி இலங்கையை பொறுப்புக்கூற வைக்கவும் இதனுடாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த அழுத்தம் கொடுக்கும் நோக்குடனும் 2012-ம் ஆண்டு, 2013-ம் ஆண்டு மற்றும் 2014-ம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்கா தீர்மானங்களை கொண்டுவந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் முதல் இரண்டு தீர்மானங்களும் இறுதி யுத்தத்தில் மேற்கொள்ளப்பட்ட யுத்தகுற்றங்கள் தொடர்பாக உள்ளக விசாரணைக்கு அழைப்பு விடுப்பதுடன் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தவும் வலியுறுத்துகின்றது. இத்தீர்மானங்கள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் பிரதிபலிப்பில் உள்ள குறைபாடுகள் காரணமாகவும் சீனா தொடர்பான இலங்கையின் நெருக்கமான உறவு காரணமாகவும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தும் மூன்றாவது தீர்மானத்தினை ஐக்கிய அமெரிக்கா நிறைவேற்ற காரணமாக அமைந்தது. 2014-ம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா நிறைவேற்றிய தீர்மானத்தின் அடிப்படையில் மனித உரிமை ஆணையாளர் அலுவலகம் முன்னெடுக்கும் சர்வதேச விசாரணையானது இலங்கையின் இறுதி யுத்தத்தில் இடம்பெற்ற சர்வதேச சட்ட மீறல்களை மையப்படுத்தி அமைந்துள்ளது. 28-வது மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்படும் இச் சர்வதேச விசாரணை அறிக்கையானது எதிர்காலத்தில் இலங்கை அரசாங்கத்தின் சர்வதேச நகர்வில் பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அமையவுள்ளது. எனவே மேற்கூறிய மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப் பற்றிய ஓர் திறனாய்வாக இவ் ஆய்வு அமைந்துள்ளது.